குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்.
எஸ் டி சி எண். 50/2020

தேதி 14-08-2021

ம சா 1 செல்வி க / பெ ஜீவானந்தம் பக்க எண். 1

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இவ்வழக்கை நான் செந்தில் குமார் என்னிடம் பணம் பெற்று திருப்பி தராததால் தொடுத்துள்ளேன். நான் 6-ஆம் வகுப்பு படித்துள்ளேன். நான் விவசாயம் செய்கிறேன். என் பெயரில் நிலம் இல்லை. என் கணவர் மிலிட்டிரியில் இருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டார் அவருக்கு மாதம் ரூபாய் 18 ஆயிரம் பென்சன் வருகிறது. எனக்கு இரண்டு மகன்கள் உள்ளனர் அவர்கள் இருவரும் சித்தமருத்துவர்கள் அதில் ஒருவர் அரசு மருத்துவராக உள்ளார். மற்றொருவர் தனிப்பட்ட முறையில் மருத்துவம் செய்கிறார். இருவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. நானும் என் இரண்டாம் மகனும் ஒன்றாக வசிக்கிறோம். மூத்த மகன் திருச்சியில் வசிக்கிறார். நான் தற்போது வசிப்பது என் சொந்த வீடுதான். மேற்படி வீடு எனது மற்றும் என் கணவர் பெயரில் உள்ளது. நான் எந்த தொழிலும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் 3 மாடுகள் வைத்துள்ளேன். அதன் மூலம் வருமானம் வருகிறது. மேற்படி சங்கதியை நான் என் பிரமாண பத்திரிக்கை, வழக்கறிஞர் அறிவிப்பில் மற்றும் புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது கணவருக்கு மாதம் ரூபாய் 18 ஆயிரம்பென்சன் வருகிறது என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மூத்த மகன் மாதம் ரூபாய் 60 ஆயிரம் சம்பாதிக்கிறார். அவர் வாடகை வீட்டில் குடியிருக்கிறார். அவருக்கு ஒரு மகள். என் இரண்டாம் மகனுக்கு 2 குழந்தைகள் உள்ளனர். அவர் ரூபாய் 50 ஆயிரம் சம்பாதிக்கிறார். நான் என் வழக்கில் கந்து வட்டி தொழில் செய்வதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அரசிடம் முறையாக அனுமதி பெற்று மேற்படி கந்து வட்டிதொழில் நான் செய்கிறேனா என்றால் நான் கந்து வட்டி தொழில் செய்யவில்லை சமய சந்தர்ப்பதற்கு இரண்டு மூன்று பேருக்கு கொடுத்துள்ளேன். நான் எதிரியை தவிர 3 பேருக்கு கடன் கொடுத்துள்ளேன். அவர்களின் பெயர்கள் சுரேஷ், லட்சுமி, நிர்மல் ஆகியோர் ஆவார்கள். எதிரி என்று கடன் வாங்கினார் என்று வழக்கில் நான் கூறியுள்ளேன் என்றால் 18-10-2016-ஆம் தேதி எதிரி என்னிடம் கடன் வாங்கினார். நான் எதிரியை தவிர இதர 3 பேர்களுக்கு கடன் கொடுத்தபோது ஆவணங்கள் வாங்கி கொண்டுதான் கடன் கொடுத்தேன். மேற்படி கடன் வட்டி விபரங்களை பற்றி ஒரு நோட்டில் எழுதி வைத்துள்ளேன் என்றால் சரிதான். மாதவட்டிக்குதான் கடன் கொடுத்துள்ளேன். எதிரியிடம் புரோநோட்டு பெற்றுகொண்டுதான் கடன் கொடுத்தேன். புரோநோட்டை எழுதியது ஒரு விஸ்வநாதன் ஆவார். அவர் இறந்துவிட்டார். மேற்படி புரோநோட்டில் ரவி மற்றும் ராஜு என்பவர்கள் சாட்சி கையொப்பம் செய்தனர். காசோலை கொடுத்தபோது எதிரி புரோநோட்டை பெற்றுக்கொண்டார். மேற்படி புரோநோட்டை நான் ஒளிநகல் எடுத்து வைக்கவில்லை. என்னுடைய கடன் கொடுத்த விபரங்கள் அடங்கிய கணக்கு நோட்டை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எதிரி தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். எதிரியின் பெற்றோர் உயிருடன் உள்ளனர். எதிரியுடன் பிறந்தவர்கள் 3 பேர்கள். எதிரியின் பெற்றோர் கூலி வேலை செய்கிறார்கள். எதிரி எப்போது ரயில்வே பணியில்

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

சேர்ந்தார் என்று எனக்கு தெரியாது. எதிரி என் வீட்டில் இருந்து அடுத்த தெருவில்தான் வசிக்கிறார். எதிரியை என் வீட்டில் இருந்து சந்திக்க ஐந்து நிமிடங்கள் போதும். எதிரிக்கு 18-10-2016-ரூபாய் நான்கு லட்சம் கடன் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். ரூபாய் 100/-க்கு 1 ரூபாய் வட்டிக்கு கடன் கொடுத்தேன். எனக்கு ஆங்கிலம் எழுதப்படிக்க தெரியாது. 18-10-2016 தேதிக்கு பின்னர் இரண்டு வருடங்களாக எதிரியிடம் நான் கடனை திருப்பி தருமாறு கேட்டுக்கொண்டிருந்தேன். அவரும் திருப்பி தருவதாக சொல்லிக்கொண்டிருந்தார். 18-10-2016 தேதிக்கு பின்னர் இரண்டு வருடங்களுக்கு எதிரி எனக்கு வட்டி செலுத்தவில்லை. புரோநோட்டை வைத்து அசலையோ அல்லது வட்டியையோ எதிரி எனக்கு தரவில்லை என்று எதிரிக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை. 18-11-2018-தேதியில் எதிரியின் வீட்டிற்கு சென்று எதிரியை பணம் திருப்பி தருமாறு காலை சுமார் 10 மணியளவில் நான் மட்டும் சென்று கேட்டேன். அச்சமயம் எதிரி வீட்டில் எதிரி மட்டும்தான் இருந்தார். 19-11-2018-தேதியில் எதிரி என்னை புரோநோட்டை எடுத்துக்கொண்டு ஈரோடுக்கு வரச்சொன்னார். நானும் என் இரண்டாம் மகனும் ஈரோட்டிற்கு சென்றிருந்தோம். அவரது வீடு ரயில்வே கேட்டில் இருந்து ஒரு கி.மீ. தொலைவில் எதிரியின் வீடு இருந்தது. அங்கே எதிரி மட்டும் தான் இருந்தார். நாங்கள் சென்றபோது மதியம் சுமார் மூன்று மணி இருக்கும். நாங்கள் இரு சக்கர வாகனத்தில் சென்றோம். அங்கு என்ன நடந்தது என்றால் நாங்கள் சென்றவுடன் டீ, காபி கொடுத்து உபசரித்தார். பின்னர் சிறு நேரம் பேசிக்கொண்டிருந்தோம், அதன்பின்னர் வீட்டிற்கு செல்ல நேரம் ஆகிவிட்டது என்று சொன்னதால் காசோலை கொடுத்தார். நாங்கள் சென்றவுடன் சுமார் அரை மணி நேரம் கழித்து காசோலை கொடுத்தார். காசோலையை பெற்றுக்கொண்டு நேரே நாங்கள் எங்கள் வீடு இருக்கும் உம்பிளிக்காம்பட்டிக்கு வந்துவிட்டோம். காசோலையில் எதிரி கையொப்பம் மட்டும்தான் போட்டு கொடுத்தாரா என்றால் அதில் இதர சங்கதிகளையும் நிரப்பி கொடுத்தார். காசோலையில் காணப்படும் கையொப்பம் ஒரு மையிலும், இதர சங்கதிகள் வேறு ஒரு மையிலும் நிரப்பப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். அது எதிரியை கேட்டால்தான் தெரியும். காசோலையில் ரூபாய் ஐந்து லட்சம் தொகை எழுதப்பட்டுள்ளது. நான் கடன் கொடுத்ததாக கூறப்படும் ரூபாய் நான்கு லட்சத்திற்கும் காசோலையில் உள்ள ரூபாய் ஐந்து லட்சத்திற்கும் இடையே ரூபாய் ஒரு லட்சம் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். எதிரி கொடுக்கவேண்டிய வட்டிக்கும் சேர்த்துதான் காசோலையில் நிரப்பி கொடுத்தார். 23-11-2018 தேதியில் காசோலையை வசூலுக்கு செலுத்தினேன். அதே தேதியில் காசோலை திருப்பப்பட்டது. நான் ஏல சீட்டு நடத்துகிறேனா என்றால் நான் இது வரை ஏல சீட்டு நடத்தியதே இல்லை. 2012-ஆம் வருடம் எதிரி ரயில்வே பணியில் சேர்ந்துவிட்டார் என்றாலும் எனவே என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல. நான் மாத சீட்டு நடத்தி வருகிறேன் என்றாலும 2015 ஆம் வருடம் மூன்று லட்ச ரூபாய் சீட்டில் எதிரி என்னிடம் உறுப்பினராக இருந்தார் என்றாலும் மேற்படி சீட்டு

எஸ்டி சி எண். 50/2020 தேதி 14-08-2021

ம சா 1 செல்வி க / பெ ஜீவானந்தம் பக்க எண். 3

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

(15)பதினைந்து மாதங்கள் உள்ளடங்கிய சீட்டு என்றாலும் மாதாமாதம் ரூபாய் இருபதாயிரம் கட்டவேண்டும் என்றாலும், எதிரி தவிர இன்னும் (14)பதினான்கு நபர்கள் அந்த சீட்டில் உறுப்பினர்களாக இருந்தார்கள் என்றாலும், அவ்வாறு சீட்டு கொடுக்கும்போது சீட்டு எடுப்பவர்களிடம் ஆதாரத்திற்காக காசோலை வாங்கி கொண்டு பணம் கொடுப்பேன் என்றாலும், அவ்வாறு சீட்டிற்காக கொடுத்த காசோலையை தான் தற்போது வழக்கிற்காக நான் தவறாகபயன்படுத்தியுள்ளேன் என்றாலும சரியல்ல. 2016-ஆம் வருடம் எதிரி என்னிடம் மேற்படி காசேலையை திருப்பி கேட்டார் என்றாலும் நான் காசசோலையை தவறவிட்டுவிட்டால் தேடி எடுத்து தருவதாக கூறினேன் என்றாலும் நம்பிக்கையின் அடிப்படையில் உள்ளுர்காரர் என்பதால் எதிரி பின்னர் காசோலை கேட்கவில்லை என்றாலும் சரியல்ல. வாசாஆ 3- வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பின்னர் உள்ளுர் பஞ்சாயத்துக்காரர் முன்னிலையில் பைசல் பேசி நான் அனுப்பிய வாசாஆ-3 ஐ வாபஸ் பெறுவதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 18-11-2018-ஆம் தேதியில் நான் உம்பிளிக்காம்பட்டியில் உள்ள எதிரியின் வீட்டிற்கு சென்று கடனை திருப்பி தருமாறு கேட்டது பொய் என்றாலும், அன்று காலை 7.30 முதல் மாலை 4.30 மணி வரை எதிரி ஈரோட்டில் ரயில்வே பணியில் இருந்தார் என்றாலும் சரியல்ல. 19-11-2018-தேதியில் ஈரோட்டில் மதியம் (3)மூன்று மணிக்கு எதிரியை சந்தித்து நான் காசோலை பெற்றதாக கூறுவது பொய் என்றாலும் அன்று மதியம் 2 மணி முதல் இரவு 10 மணி வரை ரயில்வே பணியில் (சிப்ட் டியூட்டி) இருந்தார் என்றால் சரியல்ல. 19-11-2018-தேதியில் ஈரோட்டுக்கு சென்று காசோலை வாங்கினேன் என்று நான் என் பிரமாண பத்திரிக்கையில் மற்றும் புகாரில் கூறவில்லை. 18-11-2018-தேதியில் எதிரியின் வீட்டிற்கு சென்று கடன் கேட்டேன் என்று நான் பிரமாண பத்திரிக்கையில், புகாரில் கூறவில்லை. எனவே எதிரி என்னிடம் ரூபாய் நான்கு லட்சம் கடன் பெற்றார் என்பதும், அதற்கு வட்டியுடன் சேர்த்து ரூபாய் ஐந்து லட்சத்திற்கு காசேலை கொடுத்தார் என்பது பொய் என்றால் சரியல்ல. எதிரிக்கு ரூபாய் நான்கு லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதி இல்லை என்றால் சரியல்ல. அதற்குண்டான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சீட்டு போட்ட வகையில் எதிரி என்னிடம் கொடுத்து வைத்திருந்த காசோலையை நான் இவ்வழக்கில் தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றர் சரியல்ல. எனவே எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரி மோசடியாக நடக்கும் நபர் அல்ல என்றாலும், அவர் இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் வேறு எந்த வழக்கும் நான் தொடரவில்லை.

(குறுக்கு விசாரணை இத்துடன் முடித்துக்கொள்ளப்படுகிறது. மறு விசாரணை இல்லை)

ஒம்/ எம்.ஏ. சுவேதாரண்யன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஓமலூர்.